டங்களை வகுத்து இலாகா அதிகாரிகளுக்கு, செகரட்டரிகளுக்கு வழி காட்டுவதுதான் அமைச்சர்களின் பொறுப்பே தவிர எல்லாப் பேப்பர்களும் அமைச்சர்களிடம் வருவது சரியல்ல. செகரட்டரிகள் நோட் வைக்கும் பர்ஸனல் குமாஸ்தாக்களாக வேலை செய்யும் நிலைதான் இருக்கிறது. ஆகவே இப்பொழுதுள்ள இந்த முறையை மாற்றினால் அமைச்சர்களின் திறமை ஓங்கும். அதிகாரிகள் தவறு செய்வார்களேயானால் அவர்கள் பேரில் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கட்டும். ஆனால் இந்த ரகசிய குறிப்பு முறையை மாற்றி, பகிரங்கமாக விசாரணை செய்து, உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுப்பதாக யிருந்தால் அது மிகவும் பலன் தரத்தக்கதாகயிருக்கும். ஆகவே இந்த முறையில் திருத்தியமைக்கப்படவேண்டும்.

பின்னர், பழைய காலத்தில் போட்ட மான்யுவல்களை வைத்து தொடர்ந்து நடத்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு முன்னால் இருக்கிற லட்சியத்தை நோக்கி பணியாற்றவேண்டுமென்றால், இதை மாற்றியமைக்காத வரையில் இந்த நிர்வாக இயந்திரத்தினால் நாம் கோரும் பலன் கிடைக்காது. ஆகவே இந்த மான்யுவல்கள் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து என்னென்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்று பார்த்து, அதிகாரிகளுக்கு என்னென்ன பயிற்சிகள் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்து, கால தாமதத்தைக் குறைப்பது, வீண் செலவைக் குறைப்பது இவைகளைப் பற்றி பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லஞ்சத்தை ஒழிக்க ஆண்டி கரப்ஷன் ஸ்க்வாட் இருக்கிறது. அதன் பயன் என்னவோ, அதைப் பார்த்து பயம் இருக்கிறது. வேகமாக நிர்வாகம் நடக்க, கால தாமதத்தைக்குறைக்க ஒரு குழு இருக்கவேண்டும். இலாகாக்களில் இன்ஸ்பெக்ஷன் கிடையாது. ஜில்லாவில் எந்த அளவில் நடத்துகிறார்கள் என்று தெரியாது. இலாகாக்களுக்கு எழுதும் கடிதங்களுக்கு பதில் சரியாக காலதாமதமின்றி வருவதில்லை. 6, 7 மாதங்கள் கழித்து 'இல்லை' என்று பதில் வருகிறது. அதற்குள் சூழ்நிலை மாறுகிறது. ஆகவே ப்ரோக்ராம் சேசர் என்று ஒரு தனி அதிகாரியை சீப் செகரட்டரியின் கீழ் அமைத்து ஒவ்வொரு டிப்பார்ட்மென்டிலும் எவ்வளவு காலதாமதமாகிறது, எப்படி எப்படி காரியங்கள் நடக்கின்றன என்று பார்க்கவேண்டும். அதிகாரிகளை கண்டிப்பது என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு தக்க பயிற்சி கொடுக்கவேண்டும். இவ்வளவு கான்ட் போட்டுவிட்டேன் என்று கணக்கிடுவது போதாது. எல்லோருக்கும் பயிற்சி கொடுக்கும் முறையில் தனிப் பயிற்சி அவசியப்படுகிறது என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: சட்டமன்றத் தலைவர் அவர்களே, மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ள தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் பற்றிய மான்யத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையின் மீது நான் சில கருத்துக்களை என் கட்சி சார்பாகக் கூற விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணை என்பது ஒரு மரபுக்காக குறிப்பிட்ட தொகையிலிருந்து வெட்டுவதாக எடுத்துச் சொல்லப்பட்டு, ஆனால் ஒதுக்கப்பட்டுள்ள மான்யங்களுக்காக அதிகமாக செலவழிக்க வேண்மென்று அதற்கான

தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிற சம்பிரதாயம் இருக்கிறது என்றாலும், இந்த மான்யத்திலுள்ள ஒரு சில பிரச்னைகளைப் பொறுத்த வரையில் உள்ளபடியே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை வெட்ட வேண்டுமென்ற கருத்தை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இங்கு இந்த விவாதத்தில் பேசிய எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் நமது முதலமைச்சர் அவர்களை மிக அதிகமாக புகழ்ந்தார்கள். அந்த புகழ்ச்சிக்கு எல்லாம் முதலமைச்சர் அவர்கள் அருகதையுடையவர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் திரு. மதியழகன் அவர்கள் ஒரு சிறிய சோதனை செய்து பார்த்தார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். கடுமையான குற்றத்தை எடுத்துச் சொல்கிற நேரத்தில் கனம் முதலமைச்சர் அவர்களின் முகம் மிக மிக சுருங்கி விடுகிறது. புகழ்ச்சியாக சொல்லும்போது அவருடைய முகம் எப்படியிருக்கிறது என்று பார்ப்போம் என்பதற்காக அந்தத் தந்திரத்தைக் கையாண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த சோதனையில் திரு. மதியழகன் அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். (கனம் திரு. கு. காமராஜ்: சமர்த்தியமாக கிண்டல் செய்வது தெரியாமல் இல்லை) புகழுரையைத் தாங்கும் இதயமும், மனப் பக்குவமும் இருப்பதுபோல் ஆட்சியில் இருக்கிற அவல நிலையையும் நிர்வாகத்திலுள்ள கேடுபாடுகளையும் எடுத்துச் சொல்லும்போது அந்த மனப் பக்குவம் இருக்கவேண்டுமென்பதற்காக இதை குறிப்பிட்டேனே தவிர வேறு அல்ல. தேர்தலைப் பற்றிய வெட்டுப் பிரேரணை பற்றி நான் அதிகமாக பேச விரும்பவில்லை. காரணம், கவர்னர் உரை மீது நடந்த விவாதத்தில் அது பற்றி நான் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.

திரு. கோ. வெங்கட்ராமன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. மதியழகன் அவர்கள் பேச்சுக்கு திரு. கருணாநிதி அவர்கள் கருத்துரை வழங்குவதை திரு. மதியழகன் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தேர்தலைப்பற்றி அப்பொழுது நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே தேர்தலைப் பற்றி இங்கு அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்த அம்மையார் அவர்கள் பேசும்போது, தேர்தலில் எதிர்கட்சியில் உள்ளவர்கள் ஆள்மாறாட்டம் செய்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆள் மாறாட்டம் செய்ததாக சொல்லப்படும் தேர்தல் வழக்குகள் எல்லாம் எல்லாக் கட்சி சார்பிலும் நீதி மன்றங்களில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அதை பிரித்துப் பிரித்துக் கூற நான் விரும்பவில்லை. ஆனால் ஆள் மாறாட்டம் வாக்காளர்களைப் பொறுத்து மட்டுமில்லை. அபேட்சகர்களைப் பொறுத்திருக்கக் கூடிய வகையிலும் மாலை வரை பட்டுச் சட்டை போட்டுக்கொண்டிருந்தவர்கள் ஆறு மணிக்குப் பின்னர் அமைச்சரை சந்தித்த பிறகு கதர் சட்டை போடுமளவுக்கு ஆள் மாறாட்டம் நடைபெற்று தேர்தலில் போட்டி போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆள்

மாருட்டத்தைப் பற்றி, சுதந்திரத்திற்காக தியாகங்கள் செய்தோம் என்று தங்கள் பரம்பரையை எடுத்துச் சொல்லி பெருமைப்படுகிற ஆளும் கட்சியை சார்ந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் யாரும் புதிதாக வந்து சேரவில்லையா என்று கேட்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேறு கட்சியில் இருந்து வந்து சேருவதற்கும், எதிர்கட்சியில் இருந்து ஆளும் கட்சியில் போய் சேருவதற்கும் இருக்கும் பெரிய வித்தியாசத்தை கனம் அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளுக்கு ஆளும் கட்சியிலிருந்து சிலர் வருகிறார்கள் என்றால் அடக்கு முறைக்கு ஆளாகி வருகிறார்கள். அதுவும் பயங்கரமான அடக்கு முறைகள் எல்லாம் தலைகாட்டத் தயாராயிருக்கிறது. நாட்டுப் பிரிவினை என்று பேசினால் அவர்களுக்கு எப்படி எப்படி தண்டனைகள் தரப்படும் என்று சொல்கிற அடக்கு முறைகள் உருமிக்கொண்டிருக்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருகிறார்கள். ஆளும் கட்சிக்கு செல்கிறவர்கள் இந்த இடுக்கண்களிலிருந்து தங்களை விடுவித்து கொள்ளவும், அங்கு சென்றால் பல வசதிகள், சலுகைகள் பெறலாம் என்பதற்காகவும் செல்கிறார்கள் என்ற வித்தியாசத்தையும் ஆளும் கட்சியினர் உணரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலைப்பற்றி பேசவில்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள தேர்தல்களைப் பற்றி இங்கு பேச விரும்புகிறேன். நமது கனம் நிதியமைச்சர் அவர்கள் அறநிலைய அமைச்சராக இருக்கிற காரணத்தினால் அத்தகவலை இந்நேரத்தில் எடுத்துச் சொல்வதுதான் சாலப்பொருத்தமாக யிருக்கும், வேறு வாய்ப்பு கிடைக்காது என்பதற்காக அதை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள கோவில்களிலுள்ள தேர்கள் எல்லாம் பழமை அடைந்து விட்ட காரணத்தினால் ஏலம் போடப் படுகின்றன. அப்படி ஏலம் எடுக்கிறவர்கள் பத்து பேர்கள் இருபது பேர்கள் சேர்ந்துகொண்டு 2,000 அல்லது 3,000 ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கின்றார்கள். அப்படி எடுத்து, வடபுலத்திலுள்ள பம்பாய் போன்ற இடங்களிலுள்ளவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் 15 ஆயிரம் ரூபாய் என்று இப்படி விற்கிறார்கள். அங்கு அந்தத்தேரிலுள்ள கலைப் பொருட்களை எல்லாம் தனியாக எடுத்து, பழைய காலத்தில் மரங்களினால் செய்யப்பட்ட அந்தச் சிற்பங்கள் வெளிநாடுகளில் 50 ஆயிரம் ரூபாய், 60 ஆயிரம் ரூபாய் என்று விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் எடுத்துச் சொல்கின்ற காரணத்தால், அமைச்சர் அவர்கள் திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்களுக்கு கடவுள் மீது—கோவிலின் மீது—தேரின் மீது—நம்பிக்கை வந்து விட்டது என்று முடிவுரையில் கூறக் கூடும். கிரேக்க ரோமானிய நாட்டில் எல்லாம், கலைகளிலுள்ள சிறப்பை காட்டுவதற்காக, அங்கிருந்த கடவுள்களின் உருவங்களை எல்லாம்—மாஜி கடவுள்களை எல்லாம் கலைச் செல்வங்களாக்கி கலைக்காட்சியாக வைத்திருக்கிறார்கள். அந்த அளவில் இவைகளையும் நாம் காட்சிப் பொருட்களாக வைத்

11th July 1962] [திரு. மு. கருணாநிதி]

துக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு, அறநிலையங்களை நடத்துபவர்கள் அக்கரை காட்டவேண்டும் என்பதற்காகத்தான் இதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்வதைப்பற்றி எதிர் கட்சியிலுள்ள பல அங்கத்தினர்கள் இங்கே பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். ஆளும் கட்சியிலிருந்து சில அங்கத்தினர்கள் இதைப்பற்றி சுட்டிக்காட்டினார்கள். 1960-61-ல் மந்திரிகளின் சுற்றுப்பயணத்திற்காக 97,903 ரூபாயும், 1961-62-ல் ஒரு லட்சம் ரூபாயும், செலவழித்து 1962-63-ல் 1,12,500 ரூபாய் செலவு என்று திட்டம் போடப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்யவேண்டியதுதான். இந்த மன்றத்திற்கு முதல் முதலாக நான் வந்த காலத்தில் மந்திரிகள் அவசியம் இருந்தால் மாறுவேடத்தில்கூட போய் பார்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறேன். சிலருக்கு மாறுவேடம் கூட தேவையில்லை, இவ்விதம் மாறுவேடத்தில் போனால் பல விஷயங்களை, மக்களுடைய குறைகளை அறிந்து கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால் சுற்றுப்பயணத்திற்கும் ஓர் அளவு இருக்க வேண்டும். எதிர்க்கட்சிகளை மட்டம் தட்டுவதற்கென்றே, எதிர்க் கட்சிகளை அழிப்பதற்கென்றே, எதிர்க்கட்சிகளை தாக்குவதற் கென்றே இந்த சுற்றுப்பயணத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றால், நான் மிக மிக தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன், சர்க்கார் காரியமாகப் போகும்போதாவது இந்தக் காரியத்தைச் செய்யாமல் இருக்கவேண்டும். சர்க்கார் காரியமாக போகும் போது கட்சி வேலைகள் செய்வது தவறு என்று கனம் அமைச்சர் அவர்கள் வாதிடக் கூடும். சர்க்கார் காரியமாக சுற்றுப்பயணம் போகிறார்கள் என்றால், அதற்காக செலவழிக்கப்படும் பணம், சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இவைகள் எல்லோருடைய வரிப்பணத்தைப் பெற்றுதான் சர்க்கார் செலவு செய்கின்றது. எல்லோருடைய வரிப்பணத்தைப் பெற்றுத்தான் சர்க்கார் நடைபெறுகிறது. அவ்விதம் வருகின்ற வரிப் பணத்தைக்கொண்டு அதை செலவு செய்து—கட்சி வேலைகளை நடத்துவது என்றால், அது சரியானதல்ல, முறையானது அல்ல, நேர்மையானது அல்ல, என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். அப்படியில்லாமல், சர்க்காருடைய காரியமாக வருகிற நோத்தில் மந்திரிகளுடைய நிகழ்சிநிரலில்—கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ராமையா அவர்கள் சுற்றுப்பயணம் செய்கின்ற ஒரு நிகழ்ச்சி நிரல்—பலருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தக் கோட்டையிலிருந்துதான் அனுப்பப்பட்டிருக்கிறது. 19-ம் தேதி இரவு 7-15-க்குப் புறப்படுகிறார், மறுநாள் காலை 3·50-க்கு தஞ்சாவூர் வருகிறார், 10 மணிக்கு மாவட்ட வளர்ச்சி கழகக் கூட்டத்தில், எம்.எல்.ஏ-க்களையும் எம்.பி-களையும் கலந்து பேசுகிறார். நான்கு மணிக்கு

" Discussion with Members of District Congress Committee Presidents of taluk and Town Congress Committees ".

என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரி செலுத்துகின்றவர்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்

கள். நாங்கள் கொடுக்கின்ற—இந்த நாட்டு மக்கள் அனைவரும் கொடுக்கின்ற—வரிப்பணத்தை செலவு செய்து சுற்றுப்பயணம் செய்து கட்சி வேலைகள் செய்வது சரிதானா என்பதை நியாய உணர்ச்சியோடு கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்யும் போது, அவர்களுடைய பேச்சுக்களை எல்லாம் சுருக்கெழுத்தாளர்கள் எடுப்பதில்லை, அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள், அது சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக்கழகமாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் பேசுகின்ற பேச்சுக்களை மட்டும் சுருக்கெழுத்தாளர்கள் மூலமாக குறிப்பு எடுக்கப்படுகிறது. அவ்விதம் குறிப்பு எடுக்கப்பட்டு அதன் மூலம் எதிர்க்கட்சியினரின் மீது ஏதாவது வழக்கு போடலாமா என்று சர்க்கார் திட்டமிடுவதற்கு சாதகமாக இருக்கிறது. எதிர்க்கட்சியினரின் பேச்சுக்களை குறிப்பு எடுக்க வேண்டாம் என் றுநான் சொல்லவில்லை. அதைப் போலவே ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுவதையும், அமைச்சர்கள் பேசுகின்ற பேச்சுக்களையும் குறிப்பெடுக்க வேண்டாமா என்பதை—கனம் அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கனம் அம்மையார் அவர்கள் ஓரிடத்தில் பேசும்போது "என்னுடைய கையில் இப்போது துப்பாக்கியிருந்தால் அண்ணாத்துரையை சுட்டிருப்பேன்" என்று பேசினதை நானே என் காதால் கேட்டேன். அதற்குப் பின்னால் அவர்கள் கூறினதற்கு பதில் கூறுகிற முறையில், அடுத்த பக்கத்தில் நடந்தக் கூட்டத்தில் கூறினேன், "கனம் அம்மையார் அவர்களுக்கு இட்டிலி, தோசை சுட்டு பழக்கமில்லை போலிருக்கிறது, அதனால் தான் ஆளையாவது சுடலாம் என்று புறப்பட்டிருக்கிறார்கள்" என்று பதிலும் கூறினேன். இவ்விதம் ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர் மட்டும் கூறவில்லை, இன்னும் சில மந்திரிகள் பேசுகின்ற பேச்சைக் கேட்டால்—இந்த சபையிலுள்ள தாய்மார்கள் யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். . . . பேசின் பிரிட்ஜ் அருகில் நடந்த கூட்டத்தில் ஒரு அமைச்சர் பேசும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தை விபசார முன்னேற்றக் கழகமாக பெயர் மாற்றிவிடலாம் என்ற அரிய கருத்தை தனக்கிருக்கின்ற இயல்புக்கு ஏற்ற வகையில் எடுத்துப் பேசினார்கள், இவற்றையெல்லாம் குறிப்பெடுக்க வேண்டாமா? இப்படிப்பட்ட பேச்சுக்களை எல்லாம் சுருக்கெழுத்தாளர்கள் மூலமாக குறிப்பெடுத்து, அதை அமைச்சர்களின் பார்வைக்கு கொண்டு வந்து, அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டாமா என்று கேட்கிறேன். எதிர்க்கட்சியினர் இம்மாதிரி பேசவில்லை என்றோ, பேசியே இருக்கமாட்டார்கள் என்றோ நான் மறுக்கவில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் இவ்விதம் ஏதாவது ஒருவர் பேசினால், உடனடியாக தலைவரால் மறுக்கப்பட்டு மன்னிப்புக் கேட்கின்ற நிகழ்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி ஆளும் தரப்பில் இருக்கிறதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நேற்று முன் தினம் கனம் அமைச்சர் அவர்கள் எதிர்கட்சியினர் தொகுதிக்கு என்று ஒன்றும் செய்

யாமல் இருப்பதில்லை, அப்படி சொல்வது தவறு என்றும், யார் வெற்றி பெற்றாலும் பொதுவாக செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் செய்துகொண்டுதான் இருப்போம். இதில் கட்சி வித்தியாசமொன்றும் காட்டுவதில்லை என்ற நீதி வாக்கியத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சென்ற தடவை குளித்தலை தொகுதியில் கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் "குடகனாறு திட்டமா வேண்டும் கருணாநிதிக் கல்லவா வோட்டு போட்டீர்கள். அவரிடம் போய் கேளுங்கள் என்று பேசியிருப்பதை (கனம் திரு. கக்கன் எழுந்தார்) இந்த மன்றத்தின் முன்னால் நான் இதை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் அப்போது மறுக்கவுமில்லை. ஆனால் இப்போது மறுப்பதற்கு ஆதாரத்தைத் தேடுகிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் சபாநாயகர் அவர்களே, குளித்தலையில், மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்களின் பக்கத்துணையாக நின்று, இப்போது சட்டசபை அங்கத்தினராக இருக்ககூடியவர்—அவர்கள் கூட, அந்தமாதிரி நான் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி:** அந்த அங்கத்தினர் அப்போதே தங்களை மறுத்துப் பேசினதும் எங்களுக்குத் தெரியும். அடுத்து, பெண்களைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆபாசமாகப் பேசுகிறார்கள், மரியாதை கெட்டு பேசுகிறோம் என்று கனம் அம்மையார் ஒருவர் இந்த மன்றத்தில் குறிப்பிட்டார்கள். நாங்கள் பெண்களைப்பற்றி உதாரணம் காட்டுவது தவறு, எங்கள் தலைவர்களில் யாராவது பெண்களைப்பற்றி தவறாக பேசியிருக்கிறோம் என்ற ஆதாரங்களை அம்மையார் அவர்கள் தரவில்லை. எதிர்க்கட்சியிலுள்ள நாங்கள் பெண்களைப்பற்றி ஆபாசமாகப் பேசுகிறோம் என்று சொல்லுகிற நேரத்தில், பெண்களும் சற்று அடக்க உணர்ச்சியோடு பேச வேண்டும். இன்றைய தினம் ஆளும் கட்சியிலிருக்கின்ற என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரியார் அவர்கள் அவ்விதம் பேச வில்லை என்பதை வருத்தத்தோடு இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் . . . .

Srimathi T. N. ANANDANAYAKI : Sir, on a point of order, this is an insinuation against the lady Members of the House. Unless the hon. Member withdraws these remarks, he is not fit to be a Member of this House.

Mr. SPEAKER : The hon. Member may please repeat her point of order.

Srimathi T. N. ANANDANAYAKI : Mr. Speaker, the remarks made by the hon. Member just now about the lady Members of the House is highly defamatory and insinuating. If the hon. Member does not withdraw those remarks, I am afraid he is not fit to sit here as an honourable Member of this House

MR. SPEAKER : I think the hon. Member Srimathi Anandanayaki is objecting to the words 'அடக்கமாக பேச வேண்டும்'.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Yes, Sir. It is a highly defamatory and insinuating remark made against the lady Members of this House.

MR. SPEAKER : Apart from that, I do not want any Member to attack the other Members of the House individually or even collectively. The hon. Member Sri M. Karunanithi may now proceed.

*திரு. மு. கருணாநிதி : அடுத்து, கவர்னர் பதவியைப்பற்றி இந்த மான்யத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னருக்கு தரப்படுகிற சம்பளம், கவர்னர் பதவிக்காக ஆடம்பரமாக செய்யும் செலவினங்கள், இவைகள் எல்லாம் ஆண்டு தோறும் 10 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இத்தகைய செலவுகள் மக்களுடைய வரிப்பணத்திலிருந்து செலவு செய்யவேண்டாம் என்ற கருத்தைத்தான் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கவர்னருடைய சம்பளத்திற்கு என்று 59,400 ரூபாயும் அவர்களுடைய காரியாலயச் செலவிற்காக 70,200 ரூபாயும், சுற்றுப்பிரயாணத்திற்காக 66,200 ரூபாயும், விருந்து கேளிக்கைகளுக்காக 25 ஆயிரம் ரூபாயும், மருத்துவ பராமரிப்புக்காக 22,300 ரூபாயும் ஆகிய இப்படிப்பட்ட செலவுகளை எல்லாம் சேர்த்து 62-63-ம் ஆண்டுக்கு 6,05,100 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. 61-62-ல் 5,82,000 ரூபாயாக இருந்தது. 1960-61-ல் ரூ. 4,83,711 ஆகியிருக்கிறது. கவர்னருடைய வீட்டுப் பராமரிப்புக்கு--மாளிகை பராமரிப்புக்கு ஆண்டுதோறும் 2—3 லட்ச ரூபாய் ஆகிறது. ரிப்பேர் செலவு என்ற வகையில் ஆண்டு தோறும் 2 லட்ச ரூபாய் ஆகிறது. 1960-61-ல் பராமரிப்புக்கு ரூ. 3,62,000 ஆகியிருக்கிறது—ரிப்பேருக்கு ரூ. 1,90,000 ஆகியிருக்கிறது. 1961-62-ல் பராமரிப்புக்கு ரூ. 2,41,400 ஆகியிருக்கிறது—ரிப்பேருக்கு ரூ. 2,21,000 ஆகியிருக்கிறது. 1962-63-ல் பராமரிப்புக்கு ரூ. 2,35,000 போடப்பட்டிருக்கிறது--ரிப்பேருக்கு ரூ. 2,21,000 போடப்பட்டிருக்கிறது. இப்படி ஆண்டுதோறும் 2 லட்சம் 2½ லட்சம் ரூபாய் இந்த மாளிகைக்கு ரிப்பேர் செலவு ஆகிறது என்று கணக்கு தரப்படுகிறது. அதற்கு விவரங்கள் இல்லாவிட்டாலும், கவர்னர் என்ற பெயரால் ரூ. 10 லட்சம் செலவழிப்பது நியாயம் தானா? தர்மம் தானா? காந்தி வழியில் போய்க்கொண்டிருக்கிறோம் என்று சொல்லக் கூடிய ஆளும் கட்சி அமைச்சர்களைப் பார்த்து, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, இப்படிப்பட்ட செயல் மேலும் மேலும் தொடரலாமா என்று கேட்க விரும்புகிறேன். கவர்னர் பதவி தேவை தானா என்று கேட்டால் மாநிலத்தில் குழப்பம் ஏற்பட்டால், குழப்பம் ஏற்பட்டு கட்சி மந்திரி சபை கலைக்கப்பட்டால், அப்போது கவர்னர் ஆட்சி நிறுவுவதற்கு கவர்னர் தேவை என்று, ஊரிலே தீப் பிடிக்கும், அதற்காக தீ அணைக்கும் படை தயாராக வைத்திருக்கிறோம் என்ற முறையில் தீ அணைக்கும் படை போல

11th July 1962] [திரு மு. கருணாநிதி]

கவர்னரை வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மின் விளக்கு அணைந்து விட்டால் மெழுகு வர்த்தி ஏற்றி வைக்கிறோம். மெழுகு வர்த்தி குறைந்த செலவில் கிடைத்தாலும், மின் விளக்கு அணைந்தவுடன் தான் கடையிலே ஓடிப்போய் மெழுகு வர்த்தி வாங்கி ஏற்றி வைக்கும் நிலையில், குறைந்த செலவில் நடக்கக் கூடிய காரியத்தில் கூட இப்படி நடைபெறுகிறது. 14—15 மாநிலங்களிலும் இந்திய சர்க்கார் கவர்னர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் 10 லட்சம் ரூபாய் செலவழிப்பது நியாயம் தானா? மாநிலத்தில் குழப்பம் வந்தால் என்ன செய்வது என்று கேட்கலாம். பக்கத்து மாநிலமாகிய கேரளத்தை உதாரணம் காட்டலாம். வேண்டுமானால் டில்லியில் 4—5 கவர்னர்களை வைத்துக்கொண்டு, குழப்பம் நேரிட்டால். குழப்பங்களை சமாளிக்க அந்த மாநிலத்திற்கு அனுப்பி விடுங்கள் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லக்கூடாதா என்று கேட்கிறேன். கவர்னர் நமது மாநிலத்துக்கு தேவையில்லை என்று சொன்னால், கவர்னர் வேண்டாமென்று கூறுவது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்று கூறுகிறார்கள். அரசியல் சட்டத்துக்கு விரோதம் என்று கூறி எத்தனையோ பெரும் பொறுப்புகளிலிருந்து நழுவிவிடக்கூடாது, வேண்டுமானால் அரசியல் சட்டத்தை மாற்றுகிற துணிவு ஏற்பட வேண்டும். அரசியல் சட்டம் மாற்றவேகூடாத ஒன்றல்ல—மாற்றவே முடியாத ஒன்றுமல்ல.

MR. SPEAKER : This House cannot amend the Constitution.

திரு. மு. கருணாநிதி: ஆகவே மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடத்திலே இந்த கவர்னர் பதவியினால் ஆண்டுதோறும் இழக்கின்ற 10 லட்சம் ரூபாயை இழக்கத் தயாராயில்லை, ஆகவே கவர்னர் பதவி தேவையில்லை என்று திட்ட வட்டமாகத் தெரிவிக்கவேண்டுமென்று இந்த மான்ய வெட்டுப் பிரேரணை மூலமாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோ. ராஜாராம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஸார், எதிர்க்கட்சி உப தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலுள்ள பெண் உறுப்பினர்களைப் பற்றி அடக்கமற்றவர்கள் என்று பேசிவிட்டார். அந்த மாதிரி பேசவேண்டாமென்று தலைவர் அவர்கள் சொன்னாலும், கனம் அங்கத்தினர் பேசியது குறிப்பு எடுக்கப்பட்டிருக்கிறது. இது சபை நடவடிக்கைக் குறிப்புக்களிலிருந்து நீக்கப் படாவிட்டால் இன்று மாலை பத்திரிகைகளில் "சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் பெண் மெம்பர்கள் அடக்கமற்றவர்கள்" என்று வந்துவிடும். ஆகவே, இந்த வார்த்தைகளை குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படி கனம் சபாநாயகர் அவர்கள் உத்திரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** அடக்கமற்றவர்கள் என்று சொல்லவில்லை. அடக்கமாகப் பேசவேண்டுமென்றுதான் சொன்னார்கள். அதோடு கனம் அங்கத்தினரே அடககமாகப் பேசி வழிகாட்டியிருக்கலாம்,